**Eastern University, Sri Lanka**
**External Degree Programme**
**Faculty of Commerce and Management**
**First Year Second Semester Examination in Bachelor of Business Management (BBM)-2019/2020**
**Proper/Repeat (January/February 2024)**
**BMF 1072 Career Guidance**

அனைத்து வினாக்களுக்கும் (05) விடையளிக்குக. நேரம்: 02 மணித்தியாலம்

---

**Q1) கீழ்வரும் ஒவ்வொரு வினாவுக்குமுரிய மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க. விடைத்தாளில் உரிய வினா இலக்கத்தினைக் குறிப்பிட்டு, தெரிவு செய்யப்பட்ட மிகச் சரியான விடையின் இலக்கத்தினை மட்டும் விடைத்தாளில் எழுதுக.**

1. நல்ல மனப்பாங்கினால் (Positive Attitude) விளையும் நன்மையாகக் கருத **முடியாதது?**
    1. உற்பத்தித் திறனைப் பெருக்குதல்
    2. நல்ல சுமூகமான சூழலை உருவாக்குதல்
    3. மன அழுத்தம் அதிகரித்தல்
    4. பிரச்சினைகளைத் தீர்த்தல்
2. பின்வரும் கூற்றுகளில் **தவறானது?**
    1. ஒருவரது உளச்சார்புக்கு ஏற்ற வகையில் தொழில்கள் அமையப்பெறுதல் வேண்டும்.
    2. வாழ்க்கைத்தொழில் தீர்மானங்களின் போது தனிமனித பண்புகளைக் கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியமில்லை
    3. வாழ்க்கைத்தொழில் திட்டமிடல் பெரும்பாலும் தொழில் வெற்றிக்கு உதவியாக இருக்கும்
    4. தனிபட்ட வாழ்க்கைக்கும் தொழில் நடவடிக்கைகளுக்கும் இடையில் ஒரு சமநிலை காணப்பட வேண்டும்
3. ஒரு பணியாளர் தான் பணிசெய்யும் நிறுவனத்தில் உச்சநிலையினை அடைந்த பின்னர், அவரது வாழ்க்கைத்தொழில் முன்னேற்றம், வளர்ச்சி என்பவற்றிற்கு மிகக்குறைவான சாத்தியங்கள் அல்லது முழுமையான சாத்தியங்கள் அற்றுக் காணப்படுகின்ற ஒரு நிலையை ____________________ என அழைப்பர்.
    1. பெரிதும் மாற்றமுறும் வாழ்க்கைத்தொழில்
    2. எல்லைகளற்ற வாழ்க்கைத்தொழில்
    3. வாழ்க்கைத்தொழில் மூலதனம்
    4. வாழ்க்கைத்தொழில் பீடபூமி

4. ______________________ என்பது பணியாளர்கள் தங்கள் தொழில் திறன்கள் மற்றும் ஆர்வங்களை நன்கு புரிந்துகொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும், இந்த திறன்கள் மற்றும் ஆர்வங்களை நிறுவனத்திற்குள்ளும் அதற்குப் பிறகும் மிகவும் திறம்பட பயன்படுத்துவதற்குமான ஒரு செயன்முறையாகும்.

   1. தொழில் முகாமைத்துவம்
   2. தொழில் வளர்ச்சி
   3. தொழில் திட்டமிடல்
   4. செயற்றிறன் முகாமைத்துவம்

5. ஹொலண்ட்டின் வாழ்க்கைத்தொழில் கோட்பாட்டின் படி ஏனையோருக்கு உதவுதல் சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்தல் போன்றவற்றில் ஆர்வம் உடையவர்கள் பின்வருவனவற்றில் எவ் ஆளுமைப்பிரிவில் உள்ளடங்குவர்.

   1. சமூகச்சார்புடைய
   2. யதார்த்தமான / செயல்தன்மையான
   3. துணிவாண்மையான
   4. கலைச்சுவையுள்ள

6. ஹொலண்ட்டின் வாழ்க்கைத்தொழில் கோட்பாட்டின் படி மரபுரீதியான ஆளுமையுடையோருக்குப் பொருத்தமான வாழ்க்கைத்தொழில் வகைகளாக அமையக் கூடியவை

   1. சமூகச்சார்புடைய மற்றும் மரபுரீதியான
   2. துணிவாண்மையான மற்றும் யதார்த்தமான
   3. கலைச்சுவையுள்ள மற்றும் துணிவாண்மையான
   4. யதார்த்தமான மற்றும் கலைச்சுவையுள்ள

7. மக்கள் தமது வாழ்க்கையில் பெற்றுக்கொள்ளும் அனுபவங்களின் விளைவாக, வாழ்க்கை பூராகவும் அவர்களது சுய எண்ணக்கருவாக்கத்தில் மாற்றமும் விருத்தியும் ஏற்படும் என்பதைக் குறிப்பிடும் கோட்பாடு

   1. வேலையைச் சரிசெய்தல் கோட்பாடு (Theory of work adjustment)
   2. ஹொலன்ட்டின் (Holland) வாழ்க்கைத்தொழில் கோட்பாடு
   3. டொனல்ட் சுபரின் (Donald Super) தொழில் வாழ்க்கைக் கோட்பாடு
   4. கொட்பிறிட்சன்ஸ் எல்லைப்படுத்தல் மற்றும் விட்டுக்கொடுத்தல் கோட்பாடு (Gottfredson's theory of Circumscription and Compromise)

8. சமூக சிந்தனைசார் கோட்பாட்டின் படி பின்வருவனவற்றில் தனிநபர்களின் வாழ்க்கைத்தெரிவு மூலம் **அல்லாதது**

   1. தனிப்பட்ட செயற்றிறன் அடைவுகள்

2. பெற்றுக்கொண்ட கற்றல் அனுபவம்

3. சமூக வழிப்படுத்துகை

4. பெறுபேற்று எதிர்பார்ப்புக்கள்

9. சந்தைப்படுத்தல் துறையில் சிறப்புப் பட்டத்தைக் கொண்டவர்கள் மட்டும் சந்தைப்படுத்தல் துறையில் முகாமைத்துவப் பயிலுனர்களாக (Management Trainee in Marketing) இணைத்துக்கொள்ளப்படுவது பின்வருவனவற்றில் எதற்கான உதாரணமாகும்.

1. பொதுமைப்படுத்தப்பட்ட நுழைவு வழி

2. பொதுமைப்படுத்தப்பட்ட நுழைவு நிலைசாராத வழி

3. விஷேடத்துவப்படுத்தப்பட்ட நுழைவு வழி

4. விஷேடத்துவப்படுத்தப்பட்ட நுழைவு நிலைசாராத வழி

10. விண்ணப்பதாரியின் மன ஆற்றல் மற்றும் மன விழிப்புணர்ச்சி போன்றவைகளை அளவிட உதவும் பரீட்சை

1. புலனுணர்வுத் திறன் பரீட்சை

2. ஆளுமைப் பரீட்சைகள்

3. ஒருமைப்பாட்டுப் பரீட்சைகள்

4. பொது உளச்சார்புப் பரீட்சைகள்

11. ஒரு குறித்த விசேட துறையில் தேர்ச்சிகள் மற்றும் திறன்கள் விருத்தி செய்யப்படுவதுடன் புத்தாக்கம் மற்றும் புதுப்படைப்பு என்பன இடம்பெறும் வாழ்க்கைத்தொழில் அபிவிருத்தியின் நிலை?

1. ஆராய்வும் பரீட்சிப்பும்

2. அமைத்துக் கொள்ளலும் முன்னேறுதலும்

3. மத்திய நிலைக்கால வாழ்க்கைத்தொழில்

4. பிற்கால வாழ்க்கைத்தொழில்

12. இவற்றில் எது மென்மையான திறமை **அல்லாதது**?

1. நெகிழ்வுத்தன்மை

2. தலைமைத்துவம்

3. தட்டச்சுத் திறமை

4. நேர்மை

13. விண்ணப்பிப்பவரின் இறுதியாகப் பணியாற்றிய விபரத்தில் இருந்து கடந்தகால பணி நிறைவேற்றல்களைக் காலக்கிரமமாகக் குறிப்பிடுவது

1. தொழிற்பாட்டு ரீதியான சுயவிபரக்கோவை

2. கோவைத்தொகுப்பு

3. தொழில் திட்டம்

4. காலக்கிரமமான சுயவிபரக்கோவை

14. முயற்சியாளர் ஒருவரின் இயல்பாகக் கருத **முடியாதது**

1. புத்தாக்கம் புனைதல்
2. முன்னுணர்வு
3. வளங்களால் நிறைவடையாமை
4. தூரநோக்கு

15. வாழ்க்கைத்தொழில் திட்டமிடலின் ஆரம்பப் படிமுறையாக அமைவது

1. வாய்ப்பு மற்றும் வழிகளை ஆராய்தல்
2. சுயமதிப்பீடு
3. நோக்கங்களை ஏற்படுத்தல்
4. செயற்பாட்டிற்கான ஒரு திட்டத்தை வகுத்தல்

**(15 x 2 = 30 புள்ளிகள்)**

**Q2) கீழ்வரும் ஒவ்வொரு கூற்றும் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் விடைத்தாளில் உரிய வினா இலக்கத்தினைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.**

1. இயந்திரம்சார் பகுத்தறிதல் உளச்சார்பினைக் (mechanical reasoning aptitude) கொண்டுள்ளோர், பொருட்களை (objects) இரண்டு மற்றும் மூன்று பரிமாணங்களில் கற்பனை செய்து ஒற்றுமை வேற்றுமைகளை மிக இலகுவாக அடையாளம் காண்பர். (________)
2. டொனால்ட் சுப்பரின் வாழ்க்கைத்தொழில் கோட்காடானது மக்கள் தமது வாழ்க்கையில் பெற்றுக்கொள்ளும் அனுபவங்களின் விளைவாக, வாழ்க்கை பூராகவும் அவர்களது சுய எண்ணக்கருவாக்கத்தில் மாற்றமும் விருத்தியும் ஏற்படும் எனக் குறிப்பிடுகின்றது. (________)
3. வாண்மையியல் கோவைத்தொகுப்பானது (professional portfolio) ஒருவரின் சிறந்த பணிகள், நிறைவுசெய்துள்ள செயற்பாடுகள் மற்றும் அவர் பெற்றுக்கொண்டுள்ள திறன்களின் ஒரு தொகுப்பாகும். (________)
4. ஒவ்வாரு தனிநபரும் பல்வேறுபட்ட மதிப்பீடுகளைக் கொண்டுள்ளதுடன் அவை வேறுபட்ட அளவுகளில் வலுவுடையதாகக் காணப்படுகின்றன. (________)
5. வேலைவாய்ப்பியல் என்பது தொழில்களைத் தேடுவோருடன் தொடர்புடைய அதேவேளை தொழில் வழங்குவோரின் எதிர்பார்ப்புக்களையும் பிரதிபலிக்கின்றது. (________)
6. தொழில் அனுபவம் எனப்படுவது தனியே வருடங்களின் எண்ணிக்கையில் மட்டுமே தங்கியுள்ளது. (________)
7. நுழைவுநிலை சாராத தொழில்களுக்கு விண்ணப்பிப்போருக்கு, தொழிற்பாட்டு ரீதியான சுயவிபரக்கோவை பொருத்தமானதாகும். (________)

8. குறித்த நபரும், வேலைச் சூழலும் தமக்கிடையே தொடர்பினைப் பேணிக்கொள்ளும் பொருட்டு தொடர்ச்சியாக ஒன்றுக்கொன்று அவற்றிற்கு உரித்தான தேவைப்பாடுகளைக் கட்டாயம் பூர்த்திசெய்ய வேண்டுமென வேலையைச் சரிசெய்தல் கோட்பாடு குறிப்பிடுகிறது. (________)

9. ஹொலண்ட்டின் வாழ்க்கைத்தொழில் கோட்பாட்டின் படி யதார்த்தமான ஆளுமையைக் கொண்டவர்கள் இலக்கங்கள், பதிவேடுகள், ஒழுங்குபடுத்தப்பட்ட இயந்திரங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி பணிபுரிய ஆர்வம் உடையவர்களாக இருப்பர். (________)

10. வாழ்க்கைத்தொழிலை உருவாக்கும் பணிகளின் தொடர்வரிசை முறையே வாழ்க்கைத்தொழில் பாதை என அழைக்கப்படும். (________)

**(10 x 2 = 20 புள்ளிகள்)**

**Q3)**

a. ஒரு நபரின் மென்திறன்களை மேம்படுத்துவதற்கு எவ்வகையான செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்பதனைத் தந்து விளக்குக. **(04 புள்ளிகள்)**

b. சுயவிபரக்கோவை ஒன்றைத் தயாரிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை? **(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**Q4)**

a. ஒரு நபரின் "தன்னால் செய்ய முடியும் என்ற நம்பிக்கை (Self Efficacy) எவ்வாறு உருவாகின்றது, அந்நபரின் வாழ்க்கைத்தெரிவில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதனை சமூகச் சிந்தனைசார் வாழ்க்கைத்தொழில் கோட்பாட்டின் (Social Cognitive Career Theory) அடிப்படையில் சுருக்கமாக விளக்குக.

**(08 புள்ளிகள்)**

b. ஒருவர் தனக்குப் பொருத்தமான வாழ்க்கைத்தொழில் துறையைத் தீர்மானிப்பது தொடர்பில் பின்பற்றக்கூடிய படிமுறைகளை விபரிக்குக.

**(09 புள்ளிகள்)**

c. வாழ்க்கைத்தொழில் தொடர்பில் தனிநபர்கள் எதிர்நோக்கக் கூடிய பிரச்சினைகளை இனங்காண்க.

**(08 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

Q5)

a. வாழ்க்கைத்தொழில் வழிகாட்டல் என்னும் பதத்தினை வரைவிலக்கணப்படுத்தி அதன் கீழ் உள்ளடங்கும் சேவைகளைக் குறிப்பிடுக.

**(07 புள்ளிகள்)**

b. வாழ்க்கைத்தொழில் அபிவிருத்தியின் நான்கு கட்டங்களையும் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**